**12 - STD** **இரண்டாம் இடைப் பருவத் தேர்வு - 2023** பதிவு எண்.

**கணக்குப்பதிவியல்**

நேரம்: 1.30 மதிப்பெண்கள்: 45

**I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.** (10x1=10)

1. ஒறுப்பிழப்பு செய்யும் போது பங்க முதல் கணக்கு எதில் பற்று வைக்கப்படுகிறது?
   அ) முக மதிப்பு ஆ) பெயரளவு மதிப்பு
   இ) செலுத்தப்பட்ட தொகை ஈ) அழைக்கப்பட்ட தெகை
2. நிதிநிலை அறிக்கைகள் வெளிக்காட்டாதது?
   அ) பணம் சாரா தகவல்கள் ஆ) கடந்த கால தகவல்கள்
   இ) குறுகிய கால தகவல்கள் ஈ) நீண்ட கால தகவல்கள்
3. சொத்துக்கள் வாங்கி பங்குகள் வெளியிடும் போது வரவு வைக்கப்படும் கணக்கு
   அ) விற்பனையாளர் க/கு ஆ) பற்பல சொத்துக்கள் க/கு
   இ) பங்குமுதல் க/கு ஈ) வங்கி க/கு
4. முகமதிப்பை விட அதிகமாக பெற்ற தொகை வரவு வைக்கப்படும் கணக்கு
   அ) பத்திர முனைம க/கு இ) பங்குமுதல் க/கு
   ஆ) அழைப்பு முன்பணக் க/கு ஈ) பங்கு ஒறுப்பிழப்பு க/கு
5. நிதி நிலை அறிக்கை கருவிகள்
   அ) ஒப்பீட்டு அறிக்கை ஆ) போக்கு ஆய்வு
   இ) பொது அளவு அறிக்கை ஈ) இவை அனைத்தும்.
6. பின் வரும் வாக்கியங்களில் எது சரியானது அல்ல?
   ஆ) நிதிநிலை அறிக்கையின் குறைபாடுகள் அனைத்தும் நிதிநிலை அறிக்கைகள் பகுப்பாய்விற்கும் பொருந்தும்
   ஆ) நிதிநிலை அறிவகை பகுப்பாய்வு ஒரு வழிமுறை இது இரு முடிவல்ல.
   இ) நிதிநிலை அறிவிகை பகுப்பாய்விற்கு நிபுணத்துவம் தேவையில்லை.
   ஈ) ஆய்வு செய்யப்பட்ட தகவல்களை உய்த்துணர்வது தனிப்பட்ட கருத்துக்களை உள்ளடக்கியதாகும்
7. ஒரு இனம் மற்றொரு இனத்தோடு பெற்றிருக்கும் தொடர்பினை தணிதவியல் முறையில் கூறுவது
   அ) முடிவு ஆ)விகிதம் இ) மாதிரி ஈ) தீர்மானம்
8. பங்குதாரர் நிதிக்கும் மொத்த சொத்துகளுக்கும் உள்ள விகிதாச்சரம்
   அ) உரிமையாளர் விகிதம் ஆ) முதல் உந்து திறன் விகிதம்
   இ) புற அக பொறுப்பு விகிதம் ஈ) நடப்பு விகிதம்
9. ₹8 செலுத்தப்பட்ட ₹10 மதிப்புள்ள பங்கு பொறுப்பிழப்பு செய்யப்பட்டது எனில், அதன் குறைந்த அளவு மறு வெளியீட்டு விலை
   அ) பங்கொன்று ₹10 இ) பங்கொன்று ₹5
   ஆ) பங்கொன்று ₹8 ஈ) பங்கொன்று ₹2
10. நிதி என்னும் சொல் குறிப்பிடப்படுவது
    அ) நடப்புப் பொறுப்புகள் ஆ) நடைமுறை முதல்
    இ) நிலைச் செந்துக்கள் ஈ) நீண்ட காலச் சொத்துக்கள்

**II. எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 16 கட்டாயம்)** (4x2=8)

11. மிகை ஒப்பம் என்றால் என்ன?
12. அனிதா என்பவர் தஞ்சாவூர் மோட்டார் வரையறு நிறுவனத்தின் ₹10 மதிப்புள்ள ₹500 நேர்மை பங்குகளை வைத்துள்ளார். அவர் விண்ணபத்தின் மீது ₹73, ஒதுக்கீட்டின் மீது ₹5 செலுத்தி உள்ளார், ஆனால் முதல் மற்றும் இறுதி அழைப்புத் தொகையான ₹2 செலுத்தவில்லை. அழைப்பு தொகையை செலுத்தத் தவறியதால் இயக்குநர்கள் அப்பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தனர். ஒறுப்பிழப்பிற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.



www.Padasalai.Net
CamScanner
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

13. பின்வரும் விவரங்களிலிருந்து தருண் & கோ நிறுமத்தின் ஒப்பிட்டு வருமான அறிக்கை தயார் செய்யவும்.

| விவரம் | 2016-17 | 2017-18 |
|---|---|---|
| | ₹ | ₹ |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 2,00,000 | 2,50,000 |
| இதர வருமானங்கள் | 50,000 | 40,000 |
| செலவுகள் | 1,50,000 | 1,20,000 |

14. நிதி நிலை அறிக்கைகள் யாவை?

15. கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆனந்த் கட்டுமான நிறுமத்தின் தகவல்களிலிருந்து, விரைவு விகிதத்தைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| மொத்த நடப்புப் பொறுப்புகள் | 1,00,000 |
| மொத்த நடப்புச் சொத்துகள் | 2,50,000 |
| சரக்கிருப்பு | 50,000 |
| முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் | 15,000 |

16. பத்திர முனைமக் கணக்கு பற்றி சிறு குறிப்பு வரையவும்?

**III. ஏதேனும் 4 வினாக்களுக்கு விடையளி (வினா எண் 22 கட்டாயம்) (4x3=12)**

17. ஒருப்பிழப்பு செய்த பங்குகளின் மறுவெளியீடு என்றால் என்ன?

18. நிதிநிலை அறிக்கையின் குறைபாடுகள் ஏதேனும் மூன்றினை விளக்கவும்?

19. பாரடைஸ் வரையறு நிறுமத்தின், ₹4,40,000 மதிப்புள்ள வரையறு சுகுணா நிறுவனத்திடமிருந்து வாங்கியது. இதற்குப் பதிலாக ₹10 மதிப்புள்ள முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளைசெலுத்தி நிறைவு செய்தனர். பின்வரும் சூழலுக்கான பதிவுகளைத் தரவும்.

20. பின்வரும் விவரங்களைக்கொண்டு சிவாவரையறு நிறுமத்தின் மார்ச் 31, 2016 மற்றும் மார்ச்31, 2017 க்கானபொது அளவு வருவாய் அறிக்கையினை தயார்செய்யவும்.

| விவரம் | 2015-16 | 2016-17 |
|---|---|---|
| | ₹ | ₹ |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 2,00,000 | 3,00,000 |
| இதர வருமானம் | 25,000 | 75,000 |
| செலவுகள் | 2,50,000 | 1,50,000 |
| வருமான வரி | 40% | 40% |

21. விகித பகுப்பாய்வின் நோக்கங்களை விளக்கவும்.

22. பின்வரும் தகவல்களிலிருந்து, கவிதாநிறுமத்தின் போக்கு சதவீதங்களைகணக்கிடவும்.

| விவரம் | ₹ (ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|
| | 2015-16 | 2016-17 | 2017-18 |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 100 | 125 | 150 |
| இதர வருமானம் | 20 | 25 | 30 |
| செலவுகள் | 100 | 120 | 80 |
| வருமான வரி | 30% | 30% | 30% |

**IV. அனைத்து வினாக்களுக்கு விடையளி (3x5=15)**

23. அ) தாய் நிறுவன ₹10 மதிப்புள்ள 1,00,000 நேர்மைப் பங்குகளைவெளியீடு செய்தது. விண்ணப்பத்தின்போது ₹5; ஒதுக்கீட்டின்போது ₹2; முதல் அழைப்பின்போது ₹2 மற்றும் இறுதி அழைப்பின்போது ₹1 செலுத்தவேண்டும். அனைத்து பங்குகளும் ஒப்பப்பட்டு தொகைபெறப்பட்டது. குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும். **(அல்லது)**



www.Padasalai.Net
CamScanner
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

ஆ) பின்வரும் நிலைகளில் இயக்க இலாப விகிதம் கணக்கிடவும்.

நிலை 1: விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ₹8,00,000, இயக்க இலாபம் ₹2,00,000.

நிலை 2: விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ₹20,00,000, இயக்க அடக்கவிலை ₹14,00,000.

நிலை 3: விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ₹10,00,000, மொத்த இலாபம் விற்பனையிலிருந்து பெற்ற வருவாயில் 25%, இயக்கச் செலவுகள் ₹1,00,000

24. அ) பின்வரும் மலர் நிறுமத்தின் 2016, மார்ச்31 மற்றும் 2017, மார்ச்31 ஆம் நாளைய ஒப்பிட்டு இருப்பு நிலைக் குறிப்பினைத் தயார் செய்யவும்.

| விவரம் | 2016, மார்ச் 31 | 2017, மார்ச் 31 |
|---|---|---|
| | ₹ | ₹ |
| **I. பங்குமூலதனம் மற்றும் பொறுப்புகள்** | | |
| 1. பங்குதாரர் நிதி | | |
| அ) பங்கு முதல் | 2,00,000 | 2,50,000 |
| ஆ) காப்பும் மிகுதியும் | 50,000 | 50,000 |
| 2. நீண்ட காலப் பொறுப்புகள் | | |
| நீண்ட காலக் கடன்கள் | 30,000 | 60,000 |
| 3. நடப்புப் பொறுப்புகள் | | |
| கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் | 20,000 | 60,000 |
| மொத்தம் | 3,00,000 | 4,20,000 |
| **II. சொத்துகள்** | | |
| 1. நீண்ட காலச் சொத்துகள் | | |
| அ) நிலைச் சொத்துகள் | 1,00,000 | 1,50,000 |
| ஆ) நீண்ட கால முதலீடுகள் | 50,000 | 75,000 |
| 2. நடப்புச் சொத்துகள் | | |
| சரக்கிருப்பு | 75,000 | 1,50,000 |
| ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள் | 75,000 | 45,000 |
| மொத்தம் | 3,00,000 | 4,20,000 |

**(அல்லது)**

ஆ) விஸ்வநாத் அறைகலன் வரையறு நிறுவனம், ஒன்று ₹10 வீதம் 20,000 பங்குகளை பங்கொன்றிற்கு ₹2 முனைமத்தில் வெளியிட அழைப்பு விடுத்தது.

₹2 விண்ணப்பத்தின் மீதும்

₹5 (முனைமம் உட்பட) ஒதுக்கீட்டின் மீதும்

₹5 முதலாம் மற்றும் இறுதி அழைப்பின் மீதும்

மிகை ஒப்பமாக 30,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. கூடுதலாக பெறப்பட்ட விண்ணப்பங்கள் இயக்குனர்களால் நிராகரிக்கப்பட்டன. அனைத்துத் தொகையும் பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

25. அ) அப்துல் வரையறு நிறுமம் ₹10 மதிப்புள்ள 50,000 நேர்மைப் பங்குகளைவெளியிட்டது. அனைத்துத் தொகையும், விண்ணப்பத்துடன் செலுத்துமாறு பின்வரும் நிலைகளில் குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

(i) பங்குகளைமுகமதிப்பில் வெளியிட்டால்

(ii) பங்கொன்று ₹2 முனைமத்தில் வெளியிட்டால்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

CamScanner

**(அல்லது)**

ஆ) பின்வரும் விவரங்களைக் கொண்டு பாலை வரையறு நிறுமத்தின் போக்குப்

| விவரம் | ₹ இலட்சங்களில் | | |
|---|---|---|---|
| | வருடம் 1 | வருடம் 2 | வருடம் 3 |
| I. பங்குமூலதனம் மற்றும் பொறுப்புகள் | | | |
| அ) பங்குதாரர் நிதி | 250 | 275 | 300 |
| ஆ) நீண்ட காலப் பொறுப்புகள் | 100 | 125 | 100 |
| II) நடப்புப் பொறுப்புகள் | 50 | 40 | 80 |
| மொத்தம் | 400 | 440 | 480 |
| I) சொத்துகள் | | | |
| அ) நிலைச் சொத்துகள் | 300 | 360 | 390 |
| ஆ) நடப்புச் சொத்துகள் | 100 | 80 | 90 |
| மொத்தம் | 400 | 440 | 480 |

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

CamScanner